# ஈழ அகதிகளுக்கு இந்தியா தொடர்ந்து நெருக்கடி

(கொழும்பு)
இந்தியாவிலிருந்து இலங்கைத் தமிழ் அகதிகளை இந்திய அதிகாரிகள் பலவந்தமாக இலங்கைக்குத் திருப்பி அனுப்பிவைப்பதாக அங்குள்ள பல தொண்டர் நிறு

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00


# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் திருவள்ளுவர் ஆண்டு 2025 தை 16 இதழ் 347
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 29-1-1994


## தலைவரின் பணிப்பில் சிங்கள மீனவர் விடுதலை

(யாழ்ப்பாணம்)
தமிழீழ காவல்துறையின் பாதுகாப்பிலிருந்த சிங்கள மீனவ தொழிலாளியாகிய ஷிபில் பெர்ணாண்டோ என்பவர் நேற்று விடுதலை செய்யப்பட்டார்.
தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்

(2-ம் பக்கம் பார்க்க)

## கதிரவெளி முகாமில் குண்டு வெடிப்பு

### 10 ராணுவம் காயம்

(மட்டுநகர்)
மட்டக்களப்பிலுள்ள கதிரவெளி ஸ்ரீலங்கா இராணுவ முகாம் ஆயுதக் களஞ்சியத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் பத்து இராணுவத்தினர் படுகாயமடைந்துள்ள

(2-ம் பக்கம் பார்க்க)

## அரசுக்குள் ஒரு குளப்பம்:

# வட-கிழக்கில் இன்று இருப்பது பயங்கரவாதப் பிரச்னையல்ல!

## காமினி தெரிவிப்பு

(கொழும்பு)
இலங்கையின் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இருப்பது பயங்கரவாதப் பிரச்னையல்ல. அங்கு இருப்பது இனப்பிரச்னையே என்று திரு. காமினி திஸநாயக்கா 'ஹிந்து' பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியில் நேற்று முன்தினம் இணைந்து கொண்ட முன்னாள் அமைச்சர்களுள் ஒருவரான திரு. காமினி திஸாநாயக்கா தமிழர் பிரச்னை தொடர்பாக வெளியிட்ட கருத்து ஐ. தே. க. உயர்பீடத்தில் பெரும் குழப்பநிலையை ஏற்படுத்தியுள்ளதாக தெரியவருகிறது.
ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க வடக்கு கிழக்குப் பகுதிகளில் இருப்பது இனப்பிரச்னையல்ல. அது ஒரு பயங்கரவாதப் பிரச்னையே என மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறிவந்தது தெரிந்ததே

(4-ம் பக்கம் பார்க்க)

## செலவுகளைக் குறைக்குமாறு இலங்கை அரசுக்கு அழுத்தம்

(கொழும்பு)
சிறிலங்கா அரசு தனது கடும் செலவுகளை குறைத்துக் கொண்டாலே தொடர்ந்தும் நிதியுதவி மேற்கொள்ள முடியும் என அரசை சர்வதேச நாணய நிதியம் வற்புறுத்தியுள்ளது.
உலக வங்கியின் பணிப்பின் பேரிலேயே சர்வதேச நாணய நிதியம் அரசுக்கு இவ்வாறு அழுத்தம் கொடுத்துள்ளது.
சிறிலங்கா அரசு தனது செலவுகளை கடுமையாக குறைக்க வேண்டும். இல்லாவிட்டால் வரவு செலவுத் திட்ட பற்றாக்குறைக்கு மேலதிக நிதி வழங்க முடியாது எனவும் சர்வதேச நாணயநிதியம் அறிவித்துள்ளது
இதனிடையே சர்வதேச நாணய நிதியத்தின் குழு

(2-ம் பக்கம் பார்க்க)

## மாகாண சபையிலிருந்து காமினி இராஜினாமா

(கொழும்பு)
மத்திய மாகாணசபையின் உறுப்பினர் பதவியிலிருந்து திரு. காமினி திஸநாயக்கா ராஜினாமா செய்துள்ளார்.
ஜனநாயக ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த மத்திய மாகாணசபையின் ஏனைய உறுப்பினர்கள் ஐ. தே. க.

(2ம் பக்கம் பார்க்க)

## மாகாணசபைகள் பயன் தரவில்லை

### - காமினி

(கொழும்பு)
மாகாண சபை அமைப்பு முறை இலங்கைக்கு எதிர்பார்த்தளவு பயன் அளிக்கவில்லை.
திரு. காமினி திஸநாயக்கா இவ்வாறு தெரிவித்துள்ளார்.
பி. பி. ஸி. சந்தேசிய சேவைக்கு அளித்த பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

(2-ம் பக்கம் பார்க்க)

## தென்மாகாண தேர்தல் மார்ச் 24ல் நடைபெறும்

(கொழும்பு)
தென்மாகாண சபைத் தேர்தல் மார்ச் மாதம் 24ம் தேதி வியாழக்கிழமை நடைபெறும் என்று தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.
இந்தத் தேர்தலில் 228 வேட்பாளர்கள் பங்கு பற்று

(2-ம் பக்கம் பார்க்க)

## அரச ஊழியர்களுக்கு மருத்துவ காப்புறுதி

(கொழும்பு)
அரசாங்க ஊழியர்களின் நன்மை கருதி மருத்துவக் காப்புறுதித் திட்டமொன்றை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
இந்தத் திட்டத்தின் கீழ் அரச ஊழியர்கள் அனைவரும்

(4ம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி கடற்பகுதியில் கடும் பீரங்கித்தாக்குதல்!

### அதிர்ச்சியால் ஒருவர் மரணம்

(யாழ்ப்பாணம்)
பருத்தித்துறை, வல்வெட்டித்துறை கடற் பகுதிகளில் கடற்படையினர் நேற்று முன்தினமிரவு பீரங்கித் தாக்குதல்களையும் துப்பாக்கிப் பிரயோகங்களையும் மேற்கொண்டனர்.
வெற்றிலைக்கேணி கடற் பகுதியிலிருந்து வந்த கடற்படை விசைப்படகு ஒன்று பருத்தித்துறை பகுதியினை நோக்கி பீரங்கித் தாக்குதல்களையும் துப்பாக்கிப் பிரயோகங்களையும் மேற்கொண்டது.

(2-ம் பக்கம் பார்க்க)

## இலவச பாடப் புத்தகங்கள் கப்பலில் அனுப்பிவைப்பு

(கொழும்பு)
158 மெற்றிக் தொன் எடையுள்ள இலவச பாடப் புத்தகங்கள் கப்பல் மூலம் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டுமெனத் தெரிவிக்கப்பட்டது.
ஐயாயிரம் பொதிகளாக இவை பார்சல் செய்யப்பட்

(4ம் பக்கம் பார்க்க)

## 1990-ல் கிழக்கில் காணமல் போன 159 தமிழர்பற்றி அறிய விசாரணை கமிஷன் நியமிக்க கோரிக்கை

(டோக்கியோ)
1990-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் வந்தாறுமூலையில் கிழக்கிலங்கை பல்கலைக்கழகத்துள் வைத்து ஆயுதப்படையினரால் கைதுசெய்யப்பட்டு காணாமல் போன 159 தமிழர் பற்றி அறிய சுயாதீன விசாரணைக் கமிஷன் ஒன்றை நியமிக்குமாறு சர்வதேச மன்னிப்புச் சபையின் ஜப்பான் கிளை இலங்கை அரசை கோரியுள்ளது.
இது குறித்து மன்னிப்புச

(4-ம் பக்கம் பார்க்க)

## மீனவர் தாக்குதல்குறித்து ஆராய இலங்கைக்குழு நேற்று இந்தியா விஜயம்

(புதுடில்லி)
இந்திய மீனவர்கள் மீதான இலங்கைக் கடற்படையினரின் அண்மைக்காலமாக மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் குறித்து ஆராய 9 பேர் அடங்கிய இலங்கைக் குழு நேற்று புதுடில்லி சென்றது.
இக்குழு சுங்கத்துறைத் தலைமை இயக்குநர் திரு வீரசேகர தலைமையில் செல்

(2ம் பக்கம் பார்க்க)

**மணிவாசகம்**

வாழ்வின் ஒரு துறையில் தவறான முறையில் செயலாற்றும் மனிதன் இன்னொரு துறையில் நல்ல முறையில் செயலாற்ற முடியாது. வாழ்க்கை என்பது பிரிக்க முடியாத ஒரு முழுமையானது.

- காந்திஜி

# நமது நோக்கு

## நம்ப முடியுமா?

"அர்த்தமற்ற இரத்தம் சிந்துதலுக்கு முடிவு கட்டும் காலம் வந்துவிட்டது!" எனப் பிரதமர் ரணில் தெரிவித்துள்ளார்.

கேட்க இனிக்கும் வார்த்தைகளைப் பிரதமர் சொன்னதின் பின்னணியை, காலத்தை, இடத்தைப் பாராது நாம் மகிழ்ச்சியடைய வேண்டியதில்லை.

இனவாதப் போக்கோடு செயற்படும் ஜனாதிபதி, இந்திய உதவியைப் பெறக் கூடிய தலைவர் எனக் கணிக்கப்பட்டு வந்த காமினி திசநாயக்காவை மீண்டும் கட்சியில் சேர்த்துக் கொண்ட வேளை, பிரதமர் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

போரினைத் தொடருங்கள், ரத்தம் சிந்த ஆயிரக்கணக்கான பிள்ளைகளே தயாராக உள்ளார்கள் எனத் தெற்கில் போர் முரசம் கொட்டுகையில், இனவாதிகளின் ஆதரவோடு தேர்தலில் வெற்றி காணலாம் என ஜனாதிபதி செயற்படும் பின்னணியில், பிரதமரின் சுருதி பேதமான பாடல் ஒலிக்கத் தொடங்கியுள்ளது.

ஜனாதிபதியின் கொள்கைக்கு முரணாக, அவருக்குக் குழிபறிக்கும் நோக்கத்தோடு பிரதமர் இவ்வாறு பேசினாரா? இப்படிப் பொதுமக்கள் கேட்பதில் நியாயம் இல்லாமல் இல்லை!

ஐ. தே. க.வின் பெரும்பான்மையினரின் ஆதரவுடன், பிரதமர் துணிந்து இக்கூற்றினை வெளியிட்டிருப்பாராயின், எடுக்கப்படும் நடவடிக்கைகள் மூலம் அவரது கூற்றிற்குரிய பெருமதி வெளிப்படுமாயின் மக்கள் மகிழ்ச்சி கொள்ள நியாயம் உண்டு.

அதேவேளை, புலிகளின் காவலிலுள்ள படையினரை விடுவித்தால் பேச்சுக்கு வழி பிறக்கும் எனவும் அவர் தெரிவித்த கருத்து சந்தேகக் கண்ணோடு பார்க்கப்படவேண்டியதாகும்.

பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்கள். அவர்கள் படும் துன்பங்களை ஓரளவிற்கேனும் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்!

யுத்தநிறுத்தம், தமிழ்க் கைதிகளை விடுவித்தல், பொருளாதாரத் தடைகளை ஓரளவிற்கேனும் நீக்குதல் போன்ற சில நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு நல்லெண்ணத்தை வெளிக்காட்ட வேண்டும்.

இலங்கை அரசின் கடந்தகாலச் செயற்பாடுகள் எதுவுமே இத்தகைய நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ளக் கூடியதாக அமையவில்லை என்பதை வருத்தத்துடன் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

# விஜயதுங்காவின் ஆட்சிக் காலத்தில் தமிழர் உரிமை பெறப் போவதில்லை

## — குமார் பொன்னம்பலம் சாடல் —

(கொழும்பு)

"முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா அவருடைய பதவிக் காலத்தில் எந்தவொரு கட்டத்திலும், இங்கு இனப்பிரச்சினை இல்லை பயங்கரவாதப் பிரச்சினையே உண்டு என்று அறிவின்றிக் கூறவில்லை. ஆனால் தற்போதைய ஜனாதிபதி எச்சரிக்கை அற்ற நிலையில் அதைப் பலமுறை இதையே கூறி வருவது, திரு. டி. பி. விஜேதுங்காவின் ஆட்சிக்காலத்தில் குறிப்பாகத் தமிழர் எதனையும் பெறப்போவதில்லை என்பதையும், உள ரீதியாகப் பாதிப்புறுவர் என்பதையுமே காட்டுகிறது."

இவ்வாறு அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு குமார் பொன்னம்பலம் 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகைக்குக் கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்.

அவர் அக்கடிதத்தில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:

ஜனாதிபதி பேச்சுவார்த்தைக்குத் தயார் என்கிறார். அதே வேளை புலிகளை அழிக்கவேண்டும். அவர்கள் பயங்கரவாதிகள் என்கிறார். அப்படியாயின் அவர் யாருடன் பேசவுள்ளார்?

மாகாண சபைகள், மத்திய அரசின் கொள்கைகளை நிறைவேற்றவேஉள்ளன என்றுகூறும் ஜனாதிபதி மாகாண சபைகள் மூலம் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன என்கிறார்.

உலகத்தில் சிறுபான்மை இன மக்கள் அனுபவிக்கும் சம உரிமையையே நாமும் இங்கு கேட்டு வருகின்றோம். பெரிதாக எதையும் கேட்கவில்லை. சிறுபான்மை மக்களை ஒரு உயர் குழுவாக்க நாங்கள் விரும்பவில்லை. என ஜனாதிபதி கூறுகிறார். யார் அப்படியான கோரிக்கையை விடுத்தது?

தென்பகுதியிலிருந்து தமிழர் விரட்டப்பட்டால் இனப் பிரச்சினையென்று கூறலாம் என்கிறார் ஜனாதிபதி; 1956, 1958, 1977, 1981, 1983 ஆம் ஆண்டுகளில் நடந்த இனக்கலவரத்தின் பின்பு வடகிழக்கு தமிழ் மக்கள் கொழும்பை விட ஏனைய பகுதிகளில் வாழ்வது குறைவு. இன்னமையின் தலைநகரம் கொழும்பென்பதால் இங்கு கருமங்களை செய்து கொள்ள வருகிறார்கள்.

1983 ஆம் ஆண்டின் பின் இங்கு பெரிதாக கலவரம் ஏற்படவில்லை. இதற்கு காரணம் வெளிநாடுகள் இங்குள்ள நிலைமைகளை உன்னிப்பாக அவதானிப்பதேயாகும்.

மேலும் தற்போதைய ஜனாதிபதி சர்வகட்சி மாநாடு மற்றும் இனப்பிரச்சினை சம்பந்தமான மாநாடுகளில் இவைகளை ஏன் ஒலிக்கவில்லை. இவரும் இத்தனை காலமும் இதே அரசில் மூத்த பதவியில் இருந்தவர்தானே!

இன்னும் வடக்கு - கிழக்கு தமிழருடைய தாயகமாக ஏற்க இயலாது என்கிறார் ஜனாதிபதி. ஐக்கிய தேசியக் கட்சியின் இத்தனை கால ஆட்சியில் வடக்கு-கிழக்கை தமிழரின் தாயகம் என்று ஏற்றதையும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி இதனை ஏற்றுக் கொண்டதையும், ஏன் வெளிநாடுகளே இதனை அங்கீகரித்ததையும் ஜனாதிபதி அறியாதவரா?

புலிகள் ஏனைய கட்சிகளை ஒழுக்கின ஜனநாயக முறையில் தேர்தலில் பங்குகொள்ள விடுகிறார்கள் இல்லை என்கிறார் ஜனாதிபதி. ஆனால் இங்குள்ள 3 கட்சிகளை தவிர்ந்த ஏனைய தமிழ்க் குழுக்கள் இராணுவத்திலுள்ளவர்களிலும் பார்க்க கூடிய படியை பெறுகிறார்கள் ஆடம்பரமாக 'லொட்ஜ்'களில் தங்கி செலவு செய்கிறார்கள். புலிகளை தேடுகிறோம் என்ற போர்வையில் கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் தங்கியுள்ள அப்பாவித் தமிழர்களை பயமுறுத்தி துன்புறுத்தி பணம் பறிப்பதோடு கொலைகளிலும் கடத்தல்களிலும் ஈடுபடுகிறார்கள் முப்படைகளின் தளபதி என்ற வகையில் ஜனாதிபதி தனது இருப்பிடத்திற்கு அண்மையில் நடக்கும் இந்த "பயங்கரவாத"த்தை ஏன் தடுத்து நிறுத்தவில்லை. ஏன் குறைகூறவில்லை. இவர்கள் அரசியல் பங்குபற்றி என்ன சாதனை செய்யப்போகிறார்கள்?

கிழக்கில் இரண்டுமுறை பின்போடப்பட்ட தேர்தலை மீண்டும் கொண்டு வந்துள்ளார் ஜனாதிபதி. இங்கே நேர்மையாக தேர்தல் நடைபெறவாய்ப்பில்லை ஜனாதிபதிக்கு உண்மைப்பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதல்ல நோக்கம். வடக்கு-கிழக்கில் அமைதி நிலவுகிறது என்று வெளி உலகுக்குக் காட்டவே முயற்சிக்கிறார்

இலங்கை பல இன மக்கள் வாழும் நாடு என்னும் அடிப்படை உண்மையை ஜனாதிபதி பதவியை ஏற்றபின் கூறிவரும் கூற்றுக்கள்புலப்படுத்தவில்லை என்பதுடன், அவற்றை அவர் உணரத் தவறியமையையும் வெளிபடுத்துகிறது எனவும் குறிப்பிட்டுள்ளார். -கே.வி

# திருமலையில் இரவுநேரங்களில் புலிகள் ஊடுருவல்

## அரசு கவலை

(திருமலை)

திருமலையில் அண்மைக்காலமாக புலிகளின் நடவடிக்கைகள் இரவு நேரங்களில் தீவிரமடைந்து வருவதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள பல பகுதிகளிலும் புலிகள் ஊடுருவி தாக்குதல்களை நடாத்திவருவதாகவும் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளனவாம்.

இரவு நேர ரோந்தில் ஈடுபடும் படையினர் மீதும் புலிகள் காடுகளில் மறைந்திருந்து வந்து தாக்குதல்களை நடாத்திச் செல்வதாகவும் கடந்த வாரம் இரு தரப்பினரிடையேயும் கடும் சண்டை நிகழ்ந்ததாகவும் படையினர் தெரிவித்துள்ளனர்.

கிழக்கில் உள்ளூராட்சித்தேர்தல் நடைபெறவுள்ள இவ்வேளையில் திருமலையில் புலிகளின் ஊடுருவல் அரசுக்கு பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளதாம். -சி

# ஓவியம், நடனம், சங்கீதம் ஆசிரியர் விரைவில் தெரிவு

(கொழும்பு)

பாடசாலைகளில் ஓவியம், நடனம், சங்கீதம் ஆகிய வற்றை போதிப்பதற்கு கூடுதலான ஆசிரியர்களை நியமிப்பதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

அழகியற் கல்வியை போதிப்பதற்கு ஒவ்வொரு பாடசாலையிலும் ஒரு ஆசிரியரை நியமிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதென்று கல்வி கலாசார சுதேசிய வைத்திய துறை அமைச்சர் லொக்கு பண்டார தெரிவித்தார்.

அழகியற் கல்வி நிலையத்தில் சுமார் 4 ஆயிரம் மாணவர்கள் கற்றுவருகின்றார்கள் எனவும் இவர்களில் 800 பேர் ஆசிரியர்களாக நியமிக்கப்படுவர் என்றும் அமைச்சர் தெரிவித்தார். -கே-கி

# பாதுகாப்பு வலயத்தினுள் ஷெல் வீச்சு; வீடு சேதம்

(ஆனைப்பந்தி)

நேற்று முன்தினம் இரவு மண்டைதீவில் இருந்து சிறிலங்கா படையினரால் ஏவப்பட்ட எறிகணை ஒன்று யாழ். போதனா வைத்தியசாலை பாதுகாப்பு வலயத்திற்குள் உள்ள வீடொன்றில் விழுந்து வெடித்ததினால் அவ்வீடு பலத்த சேதம் அடைந்துள்ளது.

3ம் குறுக்குத்தெருவில் ஏ. சுப்பிரமணியதாஸ் என்பவரின் வீடே சேதமாகியுள்ளது. குடும்பத்தினருடன் இவர் அதே வீட்டில் உறக்கத்திலிருந்த வேளை இந்த எறிகணை வீழ்ந்து வெடித்ததினால் ஓடுகள் சீறல்கள் உடைந்துள்ள போதிலும் எவரும் காயமெதுவும் இன்றி தெய்வாதீனமாக தப்பியுள்ளனர். அருகில் உள்ள வீடுகள் சிலவும் சேதமடைந்துள்ளன. (101-கி)

# தமிழக முதல்வர் - ஆளுநர் விரிசல் அதிகரிப்பு

(சென்னை)

சென்னை நகரின் புதிய ஷெரிப்பாக டாக்டர் சொக்கலிங்கம் பதவியேற்ற நிகழ்ச்சியில் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவும் அவரது சகாக்களும் கலந்துகொள்ளவில்லையென தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளையில் இந்திய குடியரசு தினத்தை ஒட்டி "ராஜ்பவனில்" நேற்று முன்தினம் ஆளுநர் டாக்டர் சென்னாரெட்டி அளித்த விருந்துபசாரத்திலும் முதல்வரும் அவரது சகாக்களும் கலந்து கொள்ளவில்லை

சுதந்திரதினத்தையொட்டி சென்னை மெரீனா கடற்கரையில் நடைபெற்ற 80 நிமிட அணிவகுப்பு மரியாதையை ஏற்கும் போது முதல்வரும் ஆளுநரும் ஒருவரோடொருவர் உரையாடவில்லையென்றும் கூறப்படுகிறது.

ஆளுநருக்கும் முதல்வருக்கும் இடையில் ஏற்பட்ட விரிசலையே இது காட்டுவதாக பலரும் கருத்து வெளியிட்டுள்ளனர். (க-இ)

**கனிய மரங்கள் நட்டிடுவீர்**
**கனிவுடனே காத்திடுவீர்**

# இராசிபலன்

29 - 1 - 1994

சனிக்கிழமை

(தமிழுக்கு தை 16)

துதியை: பி.ப. 4-54 வரை. மகம்: மு. இ. 11-23 வரை. அமிர்த சித்தயோகம். இராகு காலம்: 9-36 முதல் 11-06 வரை. சுபநேரம்: மாலை 3-36 முதல் 5-06 வரை.

மேடம்: கடின வாக்கு, பணமுடை, உறவினர் பிரிசல்.

இடபம்: தப்பபிப்பிராயம், காரியத் தடை, அலைச்சல்.

மிதுனம்: தொழில் இழப்பு, பெரியோர் உதவி, சுப காரியம்.

கடகம்: மனவேதனை, குடும்பப் பிரிவு, உடல் அசதி.

சிம்மம்: வாழ்க்கை வசதி, சகோதரர் புத்திமதி, திரவம்

கன்னி: குடும்பக் கவலை, மனப் பயம், பயண தாமதம்.

துலாம்: உயர்ந்த ஸ்தானம், செல்வந்தர் நட்பு, புகழ்.

விருச்சிகம்: வாக்கு வசிகரம், நண்பர் சகவாசம், விருந்து.

தனுசு: மனக் கிலேசம், ஒதுங்கிப் போதல், புத்திரர் கவலை.

மகரம்: வஞ்சிக்கப்படல், சுக சௌரவம் பாதிப்பு, தொழில் வகை.

கும்பம்: அதிக பிரயாசம், சுமுக உறவு, உற்சாகம்.

மீனம்: இனிய சந்திப்பு, மனக் களிப்பு, வீட்டில் சுப காரியம், சந்தோசம்.

— ஜோஸ்யர்

## ஓய்வூதியக் கொடுப்பனவு

(கொழும்புத்துறை)

வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிராமிய வங்கியில் ஓய்வூதியம் பெறுபவர்களின் ஜனவரி மாதத்திற்கான ஓய்வூதியக் கொடுப்பனவுகள், பணமாக வழங்கப்பட்டு வருகின்றன. -154

## இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை அதிபராகப் பணியாற்றி ஓய்வுபெறும் திரு. க. பாலசிங்கத்திற்கு, இன்று சனிக்கிழமை காலை 8-00 மணிக்கு அதிபர் திரு. பொ. நடராசா தலைமையில் சேவை நலம் பாராட்டு விழா நடைபெறவுள்ளது.

0 0 0

(யாழ்ப்பாணம்)

அரியாலை ஐக்கிய கழகத்தின் 45வது வருடாந்தப் பொதுக் கூட்டம், இன்று சனிக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு திரு ஆ. சண்முகநாதன் தலைமையில் அரியாலை சனசமூக நிலையத்தில் நடைபெறும்.

